# கொ/இந்துக் கல்லூரி, கொழும்பு – 4

# முதலாந்தவணைப் பரீட்சை – 2016

## சைவநெறி II

## தரம் - 11

சுட்டெண்:…………………………… நேரம் : 2 மணி

- **முதலாம், இரண்டாம் வினா உட்பட மேலும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**
- **முதலாம் வினாவின் விடைக்கு 20 புள்ளிகளும் இரண்டாம் வினாவின் விடைக்கு 16 புள்ளிகளும் ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் 8 புள்ளிகளும் வீதமும் வழங்கப்படும்.**

01. கீழ் வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக
    1) சைவசமய தத்துவ அடிப்படையில் தலைவன் என்ற சொல்லின் பொருள் யாது?
    2) கடவுளுக்குரிய சிறப்பியல்பு யாது?
    3) நாம் உணவு உண்பதற்கு முன்பு ஓதவேண்டிய தேவாரத்தின் முதலடியை எழுதுக.
    4) பூர்வக்கிரியைகள் 2 தருக.
    5) "ஒப்புரவு" என்பதன் பொருள் யாது?
    6) பஞ்சாங்கம் பற்றிய விடயங்களை விளக்கிய இருவர் தருக.
    7) பாடசாலையில் வளர்க்கப்படும் விழுமியங்கள் 2 தருக.
    8) "கார்த்திகை விளக்கீடு" உணர்த்தும் தத்துவம் யாது?
    9) "அன்பர் தமக்கான நிலைப் பொருளோனே ஐந்து கரத்தானை முகப் பெருமாளே" என்ற திருப்புகழ் போற்றும் கடவுள் யார்?
    10) "திகட சக்கரச் செம்முகமைந்துளான்" என்ற அடியை தொடக்கமாகக் கொண்ட புராணம் எது?

(10×2=20 புள்ளிகள்)

02. 1) கீழ்வரும் பாடல்களுள் இரண்டினை அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதுக.
    2) அவற்றின் பொழிப்புரையை எழுதுக.
        1. அங்கமும் வேதமும்………….
        2. நாமார்க்கும் குடியல்லோம்……….
        3. மீளா அடிமை………….
        4. பால் நினைந்தூட்டுந் தாயினும்…………
        5. விநாயகனே வெவ்வினையை……………

(16 புள்ளிகள்)

03. "வேதமோடாகமம் மெய்யாம் இறைவனூல்" (திருமந்திரம்)
    1) இறைவனால் அருளிச் செய்யப்பட்ட சிறப்பு நூல், பொது நூல் எனப்படும் நூல்கள் எவை?
    2) வேதகால மக்கள் இறைவனிடம் வேண்டியவை எவை?
    3) "அதர்வ வேதம்" பற்றி சுருக்கமாக எழுதுக.

(8 புள்ளிகள்)

04. "மெய்ஞ்ஞானத்தை விளக்கும் நூல்களே சித்தார்ந்த சாஸ்திரங்களாகும்"
    1) அகச்சந்தான குரவர்கள் யாவர்?
    2) சித்தாந்த சாஸ்திர நூல்கள் எத்தனை? உமாபதி சிவாச்சாரியார் அருளிய நூல்கள் 2 தருக.
    3) அந்நூல்களில் ஒரு நூல் பற்றி சுருக்கமாக எழுதுக?

(8 புள்ளிகள்)

05. “தென் கைலாயம் எனச் சிறப்பிக்கப்படும் புண்ணிய பூமி இலங்கை ஆகும்”
   1) யாழ்ப்பாண ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் தோற்றம் பெற்ற முருகன் ஆலயம் எது?
   2) இவ்வாலயச் சூழலில் நடமாடிய ஞானவான்கள் இருவர் தருக.
   3) மட்டக்களப்பு களுதாவளைப் பிள்ளையார் ஆலயம் பற்றி சுருக்கமாக எழுதுக.

(8 புள்ளிகள்)

06. “ஓர் இனத்தின் பண்பாட்டு பிரதிபலிப்பாக சடங்குகள் விளங்குகின்றன”
   1) அபரக்கிரியை என்றால் என்ன? அக்கிரியையின் நோக்கம் யாது?
   2) சடங்குகள் செய்யப்படுவதன் நோக்கங்கள் 2 தருக.
   3) “மகாளயம்” பற்றி சுருக்கமாக எழுதுக.

(8 புள்ளிகள்)

07. கீழ்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு சிறு குறிப்பு எழுதுக.
   1) பஞ்சாங்கம்
   2) விநாயக சஷ்டி
   3) சைவ தர்மம்
   4) சுவாமி விபுலானந்தரின் சமூகப் பணிகள்
   5) பாடசாலையில் சைவம்

(8 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education